**தெவிநுவர பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 15 (திருத்திய) ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜுலை 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து தெவிநுவர பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போது நிலையான சொத்துக்களை முன்னேற்றுவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 200,500 இற்கான செலவு நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) பக்கச்சுவர் ஒன்று நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,050,416 இற்கான கடன்கொடுத்தோர் மீதி மற்றும் மீளாய்வாண்டின் மூலதன செலவுகள் ரூபா 91,060 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மகநெகும வேலைத் திட்டத்தின் கீழ் மற்றும் ஒரு ஊருக்கு ஒரு வேலையின் கீழ் காணப்பட்ட 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்தியிருந்த கூட்டுத்தொகை ரூபா 143,652 தொகையாகிய 10 சதவீத தடுத்து வைத்தல் பணத்தை கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது இறுதித் தினத்தில் உள்ளவாறு 06 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய தடுத்து வைத்தல் பணம் ரூபா 408,653 தொகை மற்றும் நிர்மாண வெலைக் கடன்கொடுத்தோர் மீதியில் மற்றும் மூலதனச் செலவுகளின் தேறிய பெறுமதிகள் ரூபா 94,648 தொகையால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது 03 நிர்மாண வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,834,837 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது விளையாட்டு பார்வை மண்டபத்தில் பொருத்தியிருந்த ரோலர் ஷடர் கதவுகளை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 228,973 இற்கான செலவுகளை தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருந்தது.

(எ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 02 நூலகங்களின் புத்தக மீதிகள் ரூபா 154,498 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள 15 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 14,001,340 இற்கான ஒப்பற்ற தன்மை காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2007 ஆண்டிற்கு முன்னர் இருந்து கணக்குகளில் முன்கொண்டு வந்து காணப்படும் தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா 821,995 இற்கான மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 69,089,334 தொகைக்கான ஏனைய வருமான நிலுவையில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 5,857,995 இற்கான 18 மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 22,298,561 தொகையாகக் காணப்பட்டதுடன், அம் மீதியில் 3 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 1,809,064 இற்கான 11 மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பலவினக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 3,917,436 தொகையாகக் காணப்பட்டதுடன் அம் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 2,430,998 இற்கான 27 கடன்கொடுத்தோர் மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 927,876 தொகைக்கான செலுத்தப்படாத சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் மீதி ஒன்று காணப்பட்டதுடன், அதில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 518,606 இற்கான மீதியொன்றும் உள்ளடங்கியிருந்தது.

(உ) மகநெகும செயற்திட்டத்தின், நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 1,719,331 இற்கான பொறுப்புக்கள் 02 வருட காலமாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 170,063,358 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளது வரை மற்றும் முறைசார் விதமாக பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பொருட் பதிவேடுகளும் ரூபா 17,324,742 தொகைக்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதிகள், ரூபா 7,082,374 தொகைக்கான திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் மீதிகள் மற்றும் ரூபா 2,700,902 தொகைக்கான கடன்பட்டோர் (பொது) மீதி தொடர்பான விரிவான அட்டவணை, ரூபா 22,298,561 தொகைக்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி தொடர்பாக அட்டவணைகள் மற்றும் துணைப் பதிவேடுகளும் ரூபா 381,006 தொகைக்கான

முற்கொடுப்பனவு தொடர்பான அட்டவணைகள் மற்றும் வைப்புப் பதிவேடுகளும், ரூபா 495,168 தொகைக்கான பாதையொன்று நிர்மாணிப்பதற்கான கோவைகள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அக்கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

(அ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் xi ஆம் அத்தியாயத்தின் பந்திகள் 21:11 மற்றும் 22:04 இன் பிரகாரம் சபையில் கடமையாற்றும் 12 உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் சம்பளமற்ற மற்றும் அரைச் சம்பள விடுமுறைகள் தொடர்பாக மாதாந்த அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 261(3) இன் பிரகாரம் காசேட்டின் போதியளவு மீதியொன்று காணப்படாத சந்தர்ப்பத்தில் கூட்டுத்தொகை ரூபா 207,570 தொகைக்கான 02 காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,055,043 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,474,448 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 11,580,595 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 65 சதவீதம் அளவில் மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் சுயமாக உருவாக்கி வருமானத்தை மிகைத்து மூன்று வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவுக் அதிகரித்திருந்ததுடன் சபையினால் சுயமாக உருவாக்கி வருமானத்தின் மூலம் மீண்டுவரும் செலவுகளை மேவகை செய்வதற்காக இயலாத நிலைமையொன்றினைக் காட்டியது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்கள் 1:2 தொகை என காட்டிய போதிலும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளில் 03 வருடங்களை மிகைத்துள்ள முறையே ரூபா 5,857,994 இற்கான மற்றும் ரூபா 4,240,062 இற்கான மீதிகள் காணப்பட்டமையானது அந்த விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத்தன்மை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 3,590,863 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 1,951,549 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,542,412 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 1,423,289 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 4,119,123 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 62,425 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 5,753 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடல் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,037 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 67,141 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.4.2 வாடகை

ஆரம்ப நிலுவை வாடகை மீதி ரூபா 7,704,649 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 3,758,896 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 11,463,545 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,841,278 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 8,622,267 தொகை அளவான உயர்ந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது.

### 2.4.3 ஏனைய வருமானங்கள்

2014 ஆண்டின் போது ஜே.சீ.பீ. இயந்திர வாடகைக்கு கொடுத்ததன் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 221,234 தொகையினை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 923,063 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 38,095,185 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றுகை

### 3.1.1 மூலதன வேலைத் திட்டங்கள் நிறைவேற்றுவதில் முன்னேற்றம்

2016 ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூபா 184,810,000 தொகையாக இருந்த போதிலும், உள்ளவாறான மூலதனச் செலவு ரூபா 31,723,953 தொகையாகக் காணப்பட்டமையால் அவை மதிப்பீட்டு செலவில் 17 சதவீதமாக இருந்தது. சபை நிதியத்திலிருந்து ரூபா 16,700,000 தொகைக்காக 06 நிர்மாண வேலைகள் பூர்த்தி

செய்வதற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 2,238,495 தொகைக்கான ஒரு நிர்மாண வேலை மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்த நிர்மாண வேலையின் விடயங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 6,000,000 தொகைக்கான 12 வேலைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 3,817,482 தொகைக்கான 6 நிர்மாண வேலைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. எஞ்சிய 07 வேலைத் திட்டங்களை செயற்படுத்தாமையால் சபைக்கு, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து ரூபா 2,182,518 இற்கான தொகையொன்று கிடைத்திருக்கவில்லை.

(ஆ) இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் காணப்பட்ட 04 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அல்லது அப் பதவிகளில் காணப்படும் 11 மிகை பதவியணிகளை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கடந்த ஆண்டிற்கு முன்னர் இருந்து தீர்க்கப்படாமல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 1,479,593 தொகையான பெறுமதி கூட்டிய வரி மீதி மற்றும் ரூபா 174,500 இற்கான தேசத்தை கட்டிய வரி மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 06 சொத்துக்கள் தொடர்பாக பிழையற்ற முறையில் ஓட்ட அட்டவணைகள் பேணப்பட்டிருக்காததுடன், 03 வாகனங்களுக்காக 2016 ஆண்டிற்கான காப்புறுதி பாதுகாப்பு பெற்றிருக்கவில்லை. மோட்டார் கிரேடருக்காக ரூபா 1,211,621 தொகை செலுத்தி காப்புறுதி பாதுகாப்பு பெற்றிருந்த போதிலும் அதனை ஆண்டின் போது ஆக்கபூர்வமான கருமம் ஒன்றில் ஈடுபடுத்தியிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

2014 ஆண்டின் போது மகநெகும கிராமிய அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் 19 வேலைத் திட்டங்கள் செய்வதற்காக சபைக்கு கிடைத்திருந்த ரூபா 9,131,650 தொகையில் இருந்து 2014 முறையே வேலை பூர்த்திசெய்திருந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக காணப்பட்ட ரூபா 493,067 தொகையொன்று செலுத்தியிருக்கவில்லை. 9 வேலைத் திட்டங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 429,249 தொகையான 10 சதவீத தடுத்து வைத்தல் பணத்தையும் கொடுப்பனவு செய்யாமல் ரூபா 1,719,331 இற்கான தொகையொன்று சபையின் நடைமுறை கணக்கு ஒன்றில் தடுத்து வைத்திருந்தது.

### 3.3.1 ஆதனக் கடன்களில் வட்டித் தொகை மீளளிக்கப்படாமை

2006 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதி மற்றும் 2015 ஆண்டிற்காக சபை உத்தியோகத்தர் 15 பேருக்காக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ஆதனக் கடன்களுக்காக வங்கி வட்டியின் ரூபா 1,011,498 இற்கான வித்தியாசம் 2016 திசெம்பர் 31 திகதி வரை மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

### 3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

(அ) சபைக்குச் சொந்தமான 06 காணிகள் எதுவித பயன்தரு வேலைகளுக்கும் ஈடுபடுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 1,017,473 தொகை கிரயத்தை உடைய 02 சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் ரூபா 54,504,382 தொகைக்கான வேறு 06 சொத்துக்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 3.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்பட்ட 1533/16 மற்றும் 2008 ஜனவரி 25 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம், சபையினால் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக பயன்படுத்தப்படும் காணிக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) சபையினால் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக 2014 திசெம்பர் 11 திகதி சபை நிதியத்தில் இருந்து ரூபா 2,700,000 தொகை செலுத்தி 04 ஏக்கர் காணியொன்று பெற்றிருந்த போதிலும், காணியை பயன்படுத்தியிருக்காததுடன் காணியின் பாதுகாப்பிற்காக முறையான வேலைத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் சேகரிக்கப்படும் உக்கக் கூடிய குப்பைகளை கொடுப்பனவு ஒன்று இன்றி தனியார் காணியொன்றிற்கு அகற்றப்பட்டிருந்ததுடன் குப்கைகளை சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 20,585,784 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. 03 செலவு விடயங்களில் பாதீட்டு செலவு வரையறைகளை மிகைத்து ரூபா 522,611 தொகை செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், 05 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 19,096,721 தொகைக்கான சேமிப்புகளும், 04 வருமான விடயங்களில் நெருங்கப்படாத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 14,800,898 தொகையும் காணப்பட்டது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 421,668 இற்கான தொகையொன்று சம்பளங்கள் மற்றும் படிகள் ஆக செலுத்தப்பட்டிருந்தது.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை செயற்படுத்துதல்

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டு முகாமைத்துவம்